

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2024) கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கிடும் வகையில் பில்லூர் III கூட்டுக் குடிநீர் திட்டத்தினை குறித்த காலத்தில் செயல்படுத்தி சிறப்பான முறையில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோவை மண்டல தலைமை பொறியாளர் கே. செல்லமுத்து மற்றும் துறை பணியாளர்களை பாராட்டினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### இங்கிலாந்து - லண்டன் நகரில் நடைபெற்றுவரும் -புகழ்பெற்ற

# உலக பயணச் சந்தையில் - தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கு!

## இந்தியத் தூதர் விக்ரம்குமார் துரைசுவாமி திறந்து வைத்தார்!

லண்டன், நவ. 8 -

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டன் நகரில் நடைபெற்று வரும் புகழ்பெற்ற WTM 2024 (World Travel Market 2024) உலக பயண சந்தையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை லண்டனுக்கான இந்திய தூதர் விக்ரம் குமார் துரைசுவாமி திறந்து வைத்தார்கள்.

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டன் நகரில் நடைபெற்று வரும் புகழ்பெற்ற WTM2024 (World Travel Market2024) உலக பயண சந்தையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை முதன்மை செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர் சந்திர மோகன் மற்றும் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, ஆகியோர் முன்னிலையில் லண்டனுக்கான இந்திய தூதர் விக்ரம் குமார் துரைசுவாமி (05.11.2024) அன்று குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள். உடன் ஒடிசா துணை முதல்வர் திருமதி ப்ரவதி பரிடா அவர்கள் உடன் இருந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக மாமல்லபுரம் உலக அளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும் சுற்றுலாத்தலமாக விளங்கி வருகின்றது.

தற்போது சென்னை தீவுத்திடலைச் சுற்றி நடைபெற்ற ஃபார்முலா 4 சாலை கார் பந்தயம் சென்னை நகரின் பெயரை உலக விளையாட்டு ரசிகர்களின் மனதில் நீங்காத வண்ணம் இடம்பெறச் செய்ததுடன் தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர் பெரிய கோவில், ஊட்டி மலை ரயில், கொடைக்கானல், முதுமலை சரணாலயம் உள்ளிட்ட பலதரப்பட்ட சுற்றுலாத்தலங்கள் தமிழ்நாட்டிற்கு உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளிநாட்டு மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, சர்வதேச பட்டம்விடும் திருவிழா, சென்னை விழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத்தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண்பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்று பார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலான குறும்படங்கள் உலகமெங்கம் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில் சென்றடையும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் யூடியூப், பேஸ்புக், எக்ஸ்(டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாபயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்குபெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலா சந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் புகழ்பெற்ற பயண சுற்றுலா வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலா த்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டு சுற்றுலாவின் சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரையிடப்பட்டும், புத்தகங்கள், சிறுகையேடுகள் ஆகியவை பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டு கவனஈர்ப்பு செய்யப்படுகின்றது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆகவும், 2023 ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 20,61,78,685 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டன் நகரில் 05.11.2024ல் தொடங்கி 07.11.2024 வரை நடைபெற்றது. WTM2024 (World Travel Market2024) உலக பயண சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் ஜல்லிக்கட்டு காளையுடன் காளையை தழுவி நிற்கும் வீரனின் சிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை ஆங்கிலத்தில் விளக்கங்களுடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை சுற்றுலாத்துறை அலுவலர்கள் அரங்கத்திற்கு வருகை புரிந்த பார்வையாளர்கள் மற்றும் சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு வழங்கினர்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கினை வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், சுற்றுலா தங்கும் விடுதி துறையினர், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் பார்வையிட்டு தமிழ்நாட்டின் சிறப்புகளை அறிந்தனர்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; 5.11.2024 அன்று கோவையில் முதல்வர் பங்கேற்ற நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் இசைக்கப்படுவது தவிர்க்கப்பட்டதாக ஒரு நாளேடு 'குசும்பு' செய்திருக்கிறதே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; நேற்று கோவையில் 'முதல்வர் கள ஆய்வு' என்றுதான் அறிவிக்கப்பட்டு, அதன்படி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடந்தன.**

**கள ஆய்வின் முதல் கட்டமாக, தகவல் தொழில் நுட்பப் பூங்கா கட்டிடத்திற்கான கல்வெட்டைத் திறந்துவைத்து, அங்கே அமைய உள்ள மென்பொருள் நிறுவனங்களின் குத்தகைதாரர்களுக்கு இட ஒப்பந்த ஆணைகளை முதல்வர் வழங்கினார்.**

**கள ஆய்வின் இரண்டாவது நிகழ்ச்சியாக, நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்களுக்கு, விடுவிப்பு ஆணைகளை வழங்கினார் முதல்வர்.**

**கள ஆய்வின் அடுத்த கட்டமாக, தொழிலாளர்கள் தங்கும் விடுதிக்கான கட்டுமானப் பணியை ஆய்வு செய்துவிட்டு; கோவை மாவட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் மற்றும் அறிவிப்புகளுக்குரிய செயலாக்கம் குறித்தும் முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.**

**கள ஆய்வு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து தேசிய கீதம் இசைக்கப்படுவது பொருத்தமில்லாதது.**

**சென்னைத் தலைமைச் செயலகத்தில், பல நாட்களில், ஆணைகளையும், விருதுகளையும், சான்றிதழ்களையும், ஆவணங்களையும், உரியோர்க்கு வழங்கி வருகிறார் முதல்வர். அப்போதெல்லாம் வாழ்த்து கீதங்கள் இசைக்கப்படும் வழக்கம் இல்லை; அதற்குரிய பொருத்தமும் இல்லை.**

**ஆளுநர் நிகழ்ச்சியில் ' திராவிடநல் திருநாடு' தவிர்க்கப்பட்ட கடும் கண்டனத்திற்குரிய சம்பவத்தை, முதல்வரின் கள ஆய்வு நிகழ்வுகளுடன் ஒப்பிடுவது, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட முயற்சிக்கும் அறிவீனம் ஆகும் !**

## வலைதளங்களில் வலம் வருவது!




### தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

# பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், நவ. 8 -

தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி நிலை முகவர்களின் பி.எல்.ஏ 2 ஆலோசனைக் கூட்டங்கள் ஒன்றியம், நகர, பேரூர் வாரியா நடைபெற உள்ளதாக தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட, பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் கீழ்க்கண்டவாறு பி.எல்.ஏ 2 ஆலோசணைக்கூட்டம் நடைபெற உள்ளது.

இன்று(08.11.2024. வெள்ளிக்கிழமை) காலை 09.30 மணியளவில் மதுக்கூர் வடக்கு, கிளைக் கழக அலுவலகத்தில் மதுக்கூர் மேற்கு, மதுக்கூர் பேரூர் பகுதிக்கும், காலை 11.00 மணிக்கு மதுக்கூர் ஒன்றியக் கழக அலுவலகத்தில் மதுக்கூர் கிழக்கு ஒன்றியமும், காலை 12.00 மணியளவில் தம்பிக்கோட்டை வடக்காடு சமுதாயக்கூடத்தில் பட்டுக்கோட்டை கிழக்கு ஒன்றியமும், மாலை 04.00 மணிக்கு பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியமும், மாலை 05.00 மணிக்கு ஆலடிக்குமுளை, சமத்துவ அரங்கத்தில் பட்டுக்கோட்டை மேற்கு ஒன்றியமும், மறுநாள் 09.11.2024 சனி அன்று காலை 09.30 மணியளவில் பட்டுக்கோட்டை நகரக் கழக அலுவலகத்தில் பட்டுக்கோட்டை நகர பகுதியும், காலை 11.00 மணிக்கு அதிராம்பட்டினம், ஆயிஷா மகளிர் அரங்கில் அதிராம்பட்டினம் மேற்கு நகரம், காலை 12.00 மணிக்கு அதிராம்பட்டினம் கிழக்கு நகரக் கழக அலுவலகத்தில் அதிராம்பட்டினம் கிழக்கு நகரம், மாலை 04.00 மணிக்கு துவரங்குறிச்சி, கிருஷ்ணா அமிர்தா திருமண மஹாலில் பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றிய கூட்டங்கள் நடைபெற உள்ளது.



அதுசமயம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் இக்கூட்டத்தினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பில்.எல்.ஏ2) அனைவரும் கலந்துகொள்ள வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**கட்டடத்துறை** க.து.ந.க.எண்.பி1 / 2427 / 2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Construction of Various types of buildings at **Zone - I, II, III, IV, V, VI and VIII (TWO COVER SYSTEM) (VCVT),** Construction of Community Hall Building at Gandhiji Street in Div - 44, Zone - 04 **(NNT FUND),** Request for Proposal for the Selection of Firms(s) for Third Party Audit and Quality Assessment of Building Works **and** Third Party Inspection and Testing of Electrical Installation. **(18 சிப்பங்கள்)**

**அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.749.08 இலட்சம் குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.209.65 இலட்சம்**
**முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%**

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **04.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி வரை**
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 4791 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமையில்,நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ் சண்முகம் முன்னிலையில் அதியமான் கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற BLA2,BLC மற்றும் கிளை கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கழக ஆக்கப் பணிகள் குறித்து தர்மபுரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் ஆ.கா.தருண் சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,ஒன்றிய நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (8.11.2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 3.00 மணி அளவில், வடலூர், பண்ருட்டி சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் "கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்ட அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்மாநில, மாவட்ட மகளிரணி,மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கலந்து கொள்ளவுள்ளனர். அதுசமயம் கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய,நகர, பகுதி,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பகுதி, பேரூர்,வட்டம், வார்டு, கிளை கழக மகளிர்துணை செயலாளர்கள், மகளிர்அணி,மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்கழகஅமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாநகராட்சிமேயர், மண்டலகுழு, ஊராட்சிஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய குழு, மாநகராட்சி நகராட்சி,பேரூராட்சி,ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.